குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆசிரியர்களின் நான்கு கோரிக்கைகளையும் துரிதமாக நிறைவேற்ற வாக்குறுதி அளித்துள்ளார். ஆசிரியர்களின் கோரிக்கைகளை வாக்குறுதி அளித்தபடி தீர்த்து வைக்க வேண்டுமென்று ஊராட்சி ஒன்றிய ஆணையரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார். இது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் கவனித்துக்கொண்டுள்ளார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, ஆசிரியர்களின் கோரிக்கைகள் பற்றி பேசியது சரி. ஏற்கெனவே அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை உடனடியாக பாங்கிலே கட்டி, கணக்கை ஒழுங்குபடுத்தி, பாஸ்புக் வழங்குவதில் கஷ்டம் இல்லை. அதைச் செய்ய அரசாங்கம் உடனடியாக உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் நான்கு. அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் 30—6—79க்குள் நிறைவேற்றி வைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, பிராவிடன்ட் பண்டுக்கு வசூல் செய்த பணத்தை முறையாக கணக்கு வைக்காமல் எந்தவகையில் செலவழிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால் இப்படி காலாகாலத்தில் செய்யப்படாதது டெம்பரரி மிஸ் அப்ராபிரியேஷன் என்ற முறையில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கயத்தாறு ஒன்றியத்தில் இப்படி நடந்திருக்கிறது. வேறு பல தனியார் பள்ளிகளிலும் இந்தமாதிரி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட டெம்பரரி மிஸ் அப்ராபிரியேஷன் செய்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இதிலே தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கோரிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற ஆணையர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்த வாக்குறுதியை ஆசிரியர்களும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இடையிலே நாம் புகுந்து திருத்த வேண்டியதில்லை.

(ஆ) மாலைப்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குச் செல்ல முடியாது வழி அடைக்கப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

1979 மார்ச் 21]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, திருவில்லி புத்தூர் தொகுதி, திருவண்ணாமலை பஞ்சாயத்தைச் சேர்ந்த ாலைப்பட்டி கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமான கோவிலுக்குள் செல்லக்கூடாது என்று உயர்சாதி யினர் காம்பவுண்டு சுவர் கட்டி அவர்களைத் தடுப்பதால் அங்கு நலவும் பதட்ட நிலை குறித்து மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டத்தைச் சேர்ந்த வெங்கடேசபுரம் கிராமத்தைச்சேர்ந்த ஒரு பகுதி மாலைப்பட்டி என்பதாகும். அக்கிராமத்தில் அரிசன நத்தத்தை யொட்டி சர்வே எண் 699-1-ல் ஒரு மாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு மாலைப்பட்டியைச் சார்ந்த அரிசனங்களும் மற்றவர்களும் சென்று வணங்குகிறார்கள். இக கோவில் ஏறத்தாழ 50 ஆண்டுகளாக உள்ளது. மேலே குறிப் பிட்டுள்ள நிலம், புஞ்சை தோட்ட பட்டா நிலமாகும். அது 0·71 ஏக்கர் பரப்பளவுள்ளது. அந்த நிலத்தை 1977ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13-ந் தேதி அன்று வடக்கு திருவில்லிபுத்தூரைச் சேர்ந்த பெருமாள்பட்டி நாடார் உறவின் முறையினர் விலைக்கு வாங்கிப் பதிவு செய்துள்ளனர். அதிலிருந்து அந்த நிலம் அவர்களுடைய பாத்தியதையில் உள்ளது. இப்பொழுது அந்த நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைச் சுற்றி கற்களை நாட்டி ஒரு வேலி அமைத்துள்ளனர். சுமார் 2 அடி அளவுள்ள ஒரு பாதை விட்டு மூங்கிற் கழிகளாலான ஒரு கதவு (gate) அமைத் துள்ளனர். ஆனால் அக்கதவிற்கு பூட்டுவதற்கான அமைப்புகள் ஏதுமில்லை. மாலைப்பட்டி அரிசனங்கள் வளர்க்கும் கால் நடைகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்குச் சேதம் செய்து விடாமல் முன்னேற்பாடாக அந்த வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட கோவிலுக்குச் செல்பவர்கள் அந்த மூங்கில் கதவை சற்று ஒதுக்கிவிட்டு எந்தவிதத் தடையும் இடையூறு மில்லாமல் செல்லலாம். அவ்வாறு செல்வதற்கு நாடார் உறவின் முறையினரோ மற்ற எவருமோ தடை செய்வதில்லை.

2. இதுபற்றி திருவில்லிபுத்தூர் வட்டாட்சியினர் விசா ரணை செய்தபோது அவரிடம் மாலைப்பட்டி அரிசன மக்கள் அக்கோவிலுக்குச் செல்லும் கதவு இலந்தை மர முள்ளினால் அமைக்கப்பட்டிருப்பதாக கூறினர். வட்டாட்சியர் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23-ந் தேதி அன்று அவ்விடத்தை

பார்வையிட்டார். பயிர் செய்யப்பட்ட நிலத்திற்குள் கால் நடைகள் புகுவதைத் தடுப்பதற்காகவே முள் வைக்கப்பட்டிருந்தது என்று வட்டாட்சியர் கூறியுள்ளார்.

3. இராமநாதபுரம் மாவட்டாட்சியர் 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1-ந் தேதியன்று திருவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனியுடன் இதுபற்றி விரிவான பேச்சு வார்த்தைகள் நடத்தினார். கோயில் அமைந்துள்ள நிலத்தின் தற்போதைய சொந்தக்காரர்கள் அரிசனங்களுக்கு அவ்வப்போது தொல்லைகள் கொடுத்து வருவதாக தனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால் கோவில் உள்ள நிலத்தையும் அதற்குச் செல்லும் பாதையையும் அரிசனங்கள் உபயோகத்துக்காக கையகப்படுத்தலாம் என்று இராமநாதபுரம் மாவட்டாட்சியர் பரிந்துரைத்துள்ளார். திருவில்லிபுத்தூர் தனித் தாசில்தாரிடமிருந்து இதற்கான செயற்குறிப்புகளைப் பெற்று அவற்றை நிலமெடுத்தலுக்காக அரசுக்கு அனுப்பி வைப்பதாகவும் இராமநாதபுரம் மாவட்டாட்சியர் தெரிவித்துள்ளார். அரசு இந்த செயற்குறிப்புகளைப் பெற்ற உடன் தக்க நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 10.40]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, போன வாரம் நான் தீண்டாமை பற்றிப் பேசிய போது மாண்புமிகு அமைச்சரவர்கள், பூசாரி வேடம் போட்டு தீண்டாமைப் பேயை விரட்ட வேண்டும் என்று சொன்னார்கள். நான் பூசாரி வேடம் போட்டுத்தான் அந்தக் கோவிலுக்குப் போனேன். ஆனால் அங்குள்ள சாமியைப் பூஜை செய்வதற்கு நான் போகும்போது என்னையும் மற்றும் பல தாழ்த்தப்பட்ட மக்களையும் அங்குள்ள உயர்ந்த ஜாதியினர் உள்ளே செல்ல முடியாமல் செய்துவிட்டார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சரவர்கள், அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று மாவட்ட கலெக்டரிடமிருந்து ரெகமென்டேஷன் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே அமைச்சரவர்கள் கடவுளாக இருந்து இந்தப் பூசாரியைக் காப்பாற்றுகின்ற அளவில் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக தாத்தா காலத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று சொன்னால் அது பேரன் காலத்திலே தான் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆகவே அப்படியில்லாமல் உடனடியாக அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். காலதாமதத்திற்கான காரணம் என்ன என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1979 மார்ச் 21]

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பூசாரி வேடம் போட்டு போகச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் பூசாரி வேடம் போட்டு போனதற்கு நன்றி. அவர்கள், என்னைத் தெய்வமாக வந்து பிரச்சினையைத் தீர்க்க சொல்கிறார். நானும் சொல்கிறேன், பக்தா பயப்படவேண்டாம், இந்த அரசு என்ற தெய்வம் உங்களையும் காப்பாற்றும், உங்கள் பிரச்சினையையும் தீர்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை--தொடர்ச்சி.

அமைச்சரின் ஊக்கத்திற்குப் பிறகு பேச அனுமதிப்பது குறித்து.
--தொடர்ச்சி.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பூசாரி வேடம் போட்டு மாண்புமிகு அமைச்சரவர்களிடம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று வரம் கேட்டு அதற்கு மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்களும் வரம் கொடுத்து பாதுகாப்பு அளிப்பதாகக் கூறினார்கள். எங்களுடைய பகுதியிலேயும் இந்தமாதிரிப் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். என்னுடைய தந்தையார் பூசாரியாக இருந்தாலும் எனக்குப் பூசாரி வேடம் போடத் தெரியாது. ஆகவே பூசாரி வேடம் போட்டால்தான் பிரச்சினை தீர்க்கப்படுமா அல்லது மாண்புமிகு அமைச்சரவர்களை நேரடியாக அணுகினாலே பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பெயரே கந்தசாமி. ஆகவே அவர்களுடைய பெயரிலேயே சாமி இருக்கின்ற காரணத்தால் இந்த அரசு நிச்சயம் வரம் கொடுக்கும், அவர் வரம் கேட்டு வந்தால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கோவிலிலே............(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே நீங்கள் உட்காருங்கள், தயவுசெய்து மேலும் பேச வேண்டாம்,